Previous Date of examination : 03.11.2020

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவாரூர்**

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஜுன் மாதம் 27-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா.56 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலகுமார் | வயது | 36 /2022 |
| தகப்பனார் பெயர் | ராஜமாணிக்கம் | ஜாதி | |
| தொழில் | தனியார் கல்லூரியில் விரிவுரையாளர் | மதம் | |
| ஊர் | சிவகாசி | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது சிவகாசியில் வசித்து தனியார் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றி வருகிறேன். 1வது எதிரி சக்திவேலை தெரியும். திருத்துறைப்பூண்டியில் உள்ள எனது மாமா செந்தில்குமார் என்பவர் மூலம் 1வது எதிரி சக்திவேலை தெரியும். கடந்த 2018 ம் வருடம் பிப்ரவரி மாதம் சக்திவேல் வேலை வாங்கி தருவதாக என்னிடம் சொல்லி ரூ.1லட்சம் பணம் வாங்கினார். என்னுடைய பையோடேட்டா விபரங்களையும் வாங்கிக்கொண்டார். பணத்தை 1வது எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து கொடுத்தேன். நீதிமன்றத்தில் ரெக்கார்டு கிளார்க் வேலை வாங்கி தருவதாக சொன்னார். பணத்தை கொடுத்த பின்னர் 1 வருடத்தில் வேலை கிடைக்கும் என்றார். அதன் பிறகு போன் செய்தாலும் எடுக்கவில்லை. அதன் பிறகு நேரடியாக வந்து பார்த்தேன். அப்போது பதில் ஒழுங்காக 1வது எதிரி சொல்லவில்லை. புகார் கொடுக்கலாம் என்று சென்றபோது என்னைபோல் ஏமாந்த நபர்கள் புகார் கொடுத்திருப்பதாக சொன்னார்கள். என்னை சாட்சியாக ஏற்றுக்கொள்வதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் தற்போது சிவகாசியில் உள்ள சங்கரலிங்கம் பார்மஸி காலேஜ்யில் பணியாற்றி வருகிறேன். எனக்கு பூர்வீகம் சிவகாசி ஆகும். எனக்கு 1வது எதிரியை எப்படி தெரியும் என்றால், எனது மாமா செந்தில் மூலம் தெரியும். எனதுமாமா செந்திலுக்கு 1வது எதிரி திருத்துறைப்பூண்டியில் உள்ள அகிலேஷ் என்பவர் மூலம் அறிமுகமானார். எனது மாமா செந்தில்குமார் என்னிடம் சக்திவேல் என்பவர் நீதிமன்றத்தில் வேலை இருப்பதாக சொன்னார் என்றும், என்னை வந்து சக்திவேலை பார்க்குமாறும் சொன்னார். நான் கல்லூரியில் வேலை செய்யும் நிலையில் வேறு என்ன வேலை எதிர்பார்த்தேன் என்றால் நான் தனியார் கல்லூரியில் வேலை செய்வதால் சம்பளம் குறைவு, அதனால் அரசு வேலைக்கு முயற்சித்தேன். சக்திவேல் ஏஜெண்ட் எதுவும் வைத்திருப்பதாக என்னிடம் சொல்லவில்லை. 1வது எதிரி மூலிகை மருந்து தயாரித்து விற்று வருகிறார். 1வது எதிரி அரசு வேலையில் இல்லை என்பது எனக்கு தெரியும். 1வது எதிரி எவ்வாறு வேலை வாங்கி தருவார் என நம்பினேன் என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் நம்பினேன். 1வது எதிரியின் வீட்டில் இருப்பவர் மூலம் வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி என்னிடம் சொல்லவில்லை. போலிசார் என்னை விசாரித்தபோது 1வது எதிரி என்னிடம் அவரது வீட்டில் குடியிருக்கும் நீதிமன்றத்தில் வேலை செய்யும் கோவிந்தலெட்சுமி என்பவர் மூலம் நீதிமன்றத்தில் வேலை ஏற்பாடு செய்வதாக சொன்னார் என நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சக்திவேல் நீதிமன்ற வேலையில் இல்லை என்றால் சரிதான். எந்த அடிப்படையில் நம்பினேன் என்றால் குறைவான சம்பளத்தில் இருந்ததால் நல்ல வேலை கிடைத்துவிடும் என்று நம்பினேன். 1வது எதிரி என்னிடம் வாங்கிய பணத்தை அவர் வேலைக்காக ஒரு நபரிடம் கொடுத்துவிட்டதாக சொன்னார். யார் என்பது எனக்கு தெரியாது. எனது பணம் 1வது எதிரி வசம் இல்லை என்ற விபரத்தை தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். போலிசார் என்னை 2019-ல் விசாரித்தார்கள். நான் நேரில் வந்து விபரங்களை போலிசாரிடம் சொன்னேன். போலிசார் எனக்கு சம்மன் கொடுக்கவில்லை. நான் புகார் கொடுப்பதற்காக வந்தபோது ஏற்கனவே புகார் வந்திருப்பதாக சொல்லி சாட்சியாக என்னை விசாரித்தார்கள். எனக்காக நான் சாட்சி சொல்கிறேன். நான் எழுத்து பூர்வமாக புகார் கொடுக்கவில்லை என்றால் என்னை போல் 83 நபர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்லி என்னிடம் விசாரித்து எழுதிகொண்டார்கள். 83 நபர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக போலிசார்தான் என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான். போலிசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க 1வது எதிரியை தெரியும் என்றும், 2வது எதிரியை தெரியாது என்றும், அச்சுறுத்தல் காரணமாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் 1வது எதிரியை நான் பார்த்திருந்தால் அவரிடம் பணம் கொடுத்ததற்கான ஆதாரத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைதான் போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேன் என்றால் சரிதான். நான் 1வது எதிரி சக்திவேலிடம் தற்போது வரை பணம் கேட்டு வருகிறேன் என்றால் சரிதான். 1வது எதிரி என்னிடம் பணத்தை திருப்பி தருகிறேன் என ஆசை வார்த்தை கூறியதன் அடிப்படையில் 2வது எதிரியை வழக்கில் சம்பந்தபடுத்தி 1வது எதிரியின் குறுக்கு விசாரணையில் முதன்முறையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் 1வது எதிரி வீட்டில் குடியிருக்கும் கோர்ட்டில் வேலை செய்யும் 2வது எதிரி மூலம் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி சொன்னார் என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவரை முதன்முதலாக தற்போதுதான் நீதிமன்றத்தில்பார்க்கிறேன் என்றால்சரிதான். போலிசார் விசாரித்தபோது 2வது எதிரியை பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. எப்படி அவரை பார்க்காத நிலையில் அவரை பற்றி போலிசாரிடம் சொன்னேன் என்றால் எனது மாமா என்னிடம் விபரங்களை சொன்னார். எனது மாமா என்னிடம் விபரங்களை சொல்லவில்லை என்றும், சக்திவேல் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Previous Date of examination : 03.11.2020

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவாரூர்**

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா.57 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரமேஸ்வரி | வயது | 35 /2022 |
| கணவர் பெயர் | கலியமூர்த்தி | ஜாதி | |
| தொழில் | வீட்டுகுடித்தனம் | மதம் | |
| ஊர் | வலங்கைமான் | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது வலங்கைமானில் வசித்து வருகிறேன். 1வது எதிரி சக்திவேலை எனக்கு தெரியும். எனக்கு விளக்குடியை சேர்ந்த இளவழகன் என்பவர் மூலம் 1வது எதிரியை தெரியும். 23.03.2018 ம் தேதியன்று காலை 5.00 மணிக்கு இளவழகன் எனக்கு போன் செய்து திருவாரூரை சேர்ந்த சக்திவேல் என்பவர் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாகவும், அவரிடம் பணம் கொடுத்தால் வேலை வாங்கி தந்துவிடுவார் என்றும் சொன்னார். அதனடிப்படையில் நான், எனது கணவர், எனது அப்பா, இளவழகன் ஆகியோர் அன்று மாலை 6.00 மணிக்கு 1வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு வந்து ரூ.1 லட்சத்தை கொடுத்தோம். ரூ.2 லட்சம் பணம் கேட்டார். 1 லட்சத்தை வேலை கிடைத்தவுடன் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். பணத்தை கொடுத்தவுடன் ஜூன் மாதம் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். ஒரு வருடம் ஆகியும் வேலை கிடைக்கவில்லை. நானும், எனது கணவரும் 1வது எதிரி அவரது வீட்டிற்கு போய் எங்களுக்கு வேலை வேண்டாம் என்றும் பணத்தை திருப்பி தந்துவிடுங்கள் என்று கேட்டோம். அதற்கு 1வது எதிரி வேலை கிடைத்துவிடும் வாங்கி தந்துவிடுகிறேன் என்று சொன்னார். அதன்பிறகு திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் செய்து வரச்சொன்னார்கள். எஸ்.பி. ஆபீஸ் வந்தபிறகு என்னைபோல் 83 நபர் பணம் கொடுத்து ஏமாந்த விபரம் எனக்கு தெரியவந்தது. போலிசார் என்னை

விசாரித்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் யாருக்காக சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் நான் கொடுத்த பணம் கிடைக்கவில்லை அதற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக என்னிடம் யார் சொன்னார் என்றால் சக்திவேல் சொன்னார். 1வது எதிரியை எனக்கு விளக்குடியை சேர்ந்த இளவழகன் என்பவர் மூலம் தெரியும். சக்திவேல் என்ன வேலையில் இருக்கிறார் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் அவர் வேலையில் இல்லை, எல்லோருக்கும் வேலை வாங்கி தருவதாக சொன்னார்கள். யார் மூலம் வாங்கி தருவதாக சொன்னார் என்றால் கோர்ட்டில் உள்ள ஒருவர் மூலம் வேலை வாங்கி தருவதாக சொன்னார். அந்த கோர்ட்டில் வேலை செய்யும் நபர் கோவிந்தலெட்சுமி என பின்னர்தான் தெரியும். போலிசார் விசாரித்தபோது கோவிந்தலெட்சுமி மூலமாக வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி சொன்ன விபரத்தை நான் போலிசாரிடம் சொன்னேன். 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி எந்த ஊரில் வேலை செய்கிறார் என நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. 1வது எதிரியிடம் நாங்கள் பணம் கொடுத்ததற்கு ஆவணம் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் பணம் வாங்கியதற்கு எழுதி கொடுத்துள்ளார். அதனை நாங்கள் போலிசாரிடம் கொடுக்கவில்லை. அது எனது அப்பாவிடம் உள்ளது. அதனால் கொடுக்கவில்லை. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். நான் உண்மையில் 1வது எதிரியிடம் பணம் கொடுத்திருந்தால் அந்த ஆவணத்தை போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. ( 2 வது எதிரி தரப்பில்)**

1வது எதிரி சக்திவேலிடம் நான் கொடுத்த பணத்தை நாளது தேதி வரை கேட்டு வருகிறேன் என்றால் சரிதான். 1வது எதிரி என்னிடம் பணத்தை திருப்பி தருவதாக ஆசை வார்த்தை கூறியதன் அடிப்படையில் 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி முதன்முதலாக 1வது எதிரியின் குறுக்கு விசாரணையில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.